**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

**அசல் வழக்கு எண். 22/2010**

2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 07ம் நாள் வெள்ளிக் கிழமை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாகிய DW2 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **தங்கவேல்** | **தொழில் :** | ஓட்டல் வேலை |
| **தந்தை பெயர் :** | **பாலன்** | **சமயம் :** | – |
| **ஊர் :** | ஒரத்தநாடு | **வயது** | 67 |
| **தாலுக்கா :** | ஒரத்தநாடு | **சாதி:** | – |

**07.11.2025**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 8ம் பிரதிவாதியின் மூன்றாம் தரப்பு சாட்சி ஆவேன், 8ம் பிரதிவாதியை எனக்கு நன்கு தெரியும். ஷண்முகதேவர்– மாரியம்மாள் எனக்கு முதலாளிகள். தஞ்சாவூரிலுள்ள மங்களாம்பிகா ஓட்டலில் 1974–1984 வரை சமையல் மாஸ்டருக்கு உதவியாளராக இருந்தேன். அதன் பிறகுஷண்முக தேவர் இறந்தவுடன் நான் வேலையில் இல்லை. ஆனால் அவர்களோடு பேச்சுவார்த்தை உண்டு. வழக்கு பற்றிய விவரம் தெரியும். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.